Registered as a News Paper  பக்கங்கள் 06  விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM PeoplesDaily மக்கள் தினசரி

நாதம்: 03  திருவள்ளுவர் ஆண்டு 2023  மாசி 10  (22-02-1992)  சனிக்கிழமை  ஓசை: 04

## உள்ளூர் உற்பத்திகளின் பொருட்காட்சி

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு யாழ் இந்துக் கல்லூரியில் மார்ச் 7, 8 ஆம் திகதிகளில் யாழ். மகளிர் அபிவிருத்தி நிலையத்தினர் உள்ளூர் உற்பத்திகளின் பொருட்காட்சி ஒன்றினை ஒழுங்குசெய்துள்ளனர். போர்க்காலச் சூழலில் சுய உற்பத்திப்பொருட்களுக்கு ஊக்கமளித்தல், மக்களிடையே அவற்றினை அறிமுகப்படுத்துதல், சந்தை வாய்ப்பினைப் பெற்றுக் கொடுத்தல் ஆகியவையே மேற்படி பொருட்காட்சியின் நோக்கங்களாகும். இப்பொருட் (6 ஆம்பக்கம் பார்க்க)

# 23 விமானப் படையினர் பலி

# புலிகளின் மின்வேக அதிரடி

## திருமலையில் வேங்கைகளின் வீரசாதனை

(திருக்கோணமலை)

நேற்றுக்காலை திருக்கோணமலை மாவட்டத்தில் விடுதலைப்புலி வீரர்கள் மேற்கொண்ட மிகவும் துணிகரமான மின்னல்வேக அதிரடித் தாக்குதலில் 23 விமானப்படையினர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர். இரு படை முகாம்களுக்கு மத்தியில் ரோந்தில் வந்து கொண்டிருந்த விமானப் படையணி ஒன்றைப் புலிப்படையினர் இடைமறித்து தாக்கி அழித்தனர். இருபது நிமிடங்கள்வரை நீடித்த இந்த அதிரடித் தாக்குதலில் பெருந் தொகையான ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன. வேப்பங்குளம் படைமுகாமிலிருந்து பத்தாம்கட்டை விமானப்படை முகாமிற்கு சென்று கொண்டிருந்த விமானப்படையினரே இத்தாக்குதலுக்கு இலக்காகினர்.

நேற்றுக்காலை 8.30 மணியளவில் திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள வேப்பங்குளம் முகாமிலிருந்து 10-ம் கட்டை முகாமிற்கு ரோந்தில் சென்றுகொண்டிருந்த 30 பேர் கொண்ட விமானப் படை அணி மீது விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதலை மேற்கொண்டனர். இந்த மின்னல் வேகத் தாக்குதலில் 23 விமானப்படையினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். ஏனையோர் காயங்களுடன் தப்பியோடி விட்டனர்.

திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள வேப்பங்குளம் (6ஆம் பக்கம் பார்க்க)

## மீட்கப்பட்ட நவீனரக ஆயுதங்கள்

திருக்கோணமலை மாவட்டம் வேப்பங்குளம் பகுதியில் நேற்றுக்காலை விமானப்படையினர் மீது நடத்திய தாக்குதலின் போது விடுதலைப் புலிகளால் நவீன ஆயுதங்கள் மற்றும்இராணுவத்தளபாடங்கள் பலவும் மீட்கப்பட்டன. அவையாவன,

- ★ ரி-81 எல். எம். ஜி. 01
- ★ ஏ. கே. எல். எம். ஜி. 01
- ★ ரி-81 09
- ★ ரி-56-1 11
- ★ ரி-56 01
- ★ ஜே. ஆர். ரக கைக்குண்டு 08
- ★ ஐ. எம். ரவைகள் 2090
- ★ ரி-81 - றம் மகஸீன் 03
- ★ ரி-81 எல். எம். ஜி. றம் மகஸீன் 03
- ★ ரி-56 மகஸீன் 57
- ★ ரி-81 மகஸீன் 25
- ★ ரி-81 லிங்குகள் 248
- ★ சப்பாத்து 17
- ★ தண்ணீர்கான் 13
- ★ கோல்சர் 16
- ★ கப் 04
- ★ பறேட் கப் 10
- ★ ஏ. கே. கோல்சர் 19
- ★ ரி-86 எல். எம். ஜி கோல்சர் 01

## புலிகளுக்கு எதிராக போர் தொடருமாம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெறும் என பிரதம மந்திரி டி. பி. விஜயதுங்கா கூறினார். நேற்று பாராளுமன்றத்தில் அவசரகால சட்ட விவாதத்தின் போது அவர் பேசுகையில் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு அரசாங்கம் ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைக்கும் என்றும், அத் தீர்வுத் திட்டத்தை புலிகள் ஏற்கும் வரை இராணுவ நடவடிக்கை தொடரும் எனவும் கூறினார்.

## இரு வேங்கைகள் களப்பலி

(திருக்கோணமலை)

வேப்பங்குளம் பகுதியில் வைத்து சிறிலங்கா விமானப் படையினருக்கு எதிராக விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட அதிரடித் தாக்குதலில் இரண்டு போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர். வீரச்சாவைத் தழுவிக்கொண்ட லெப்ரினன்ட் விக்னேஸ் (அருளப்பர் ஜோஜ் - ஊர்காவற்துறை மேற்கு), 2 ஆம் லெப்ரினன்ட் கர்ணன் (இராசதுரை தெய்வேந்திரம் - மூதூர்) ஆகிய இரு போராளிகளுக்கும் விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## விபரம் வெளியிட மறுப்பு

ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்ட வேளையில் குடா [6 ஆம் பக்கம் பார்க்க]

## உதவிக்கு வந்த படையணிகள் புலிகளால் விரட்டியடிப்பு

இந்தத் தாக்குதல் நடைபெற்றுக்கொண்டிருந்த சமயம் வேப்பங்குளம் முகாமிலிருந்தும் 10ஆம் கட்டை முகாமிலிருந்தும் விமானப்படையினர் உதவிக்கு சென்றனர். உதவிக்கு வந்த படையினரையும் எதிர்கொண்டு புலிப்படை (6 ஆம் பக்கம் பார்க்க)

## தேசத் துரோகிகளைக் கண்டு யாழ். மக்கள் ஆவேசம்

சிங்கள இராணுவத்தின் நான்கு உளவாளிகள் கடந்த இரண்டு நாட்களாக குடாநாட்டின் பல்வேறு இடங்களிலும் மக்கள் மத்தியில் அம்பலப்படுத்தப்பட்டு வருகின்றனர்.

ஒரு சில மணிநேர முன்னறிவித்தலுடன் ஆரம்பமாகும் இந்த அம்பலப்படுத்தல் நிகழ்ச்சியில் ஆயிரக்கணக்கான மக்கள் கூடுகின்றனர்.

குறித்த நேரத்தில் புலிகளினால்கொண்டுவரப்படும் அந்த நான்கு உளவாளிகளும்திரண்டு நிற்கும் மக்கள் முன்னிலையில் ஒவ்வொருவராக அம்பலப்படுத்தப்பட்டனர்.

எதை, எதை எமது மக்களின் எதிரிகளுக்கு காட்டிக் கொடுத்திருக்கின்றார்கள்? எப்படி,எப்படி எல்லாம் தகவல்களைக் கொடுத்திருக்கின்றார்கள்.

உளவாளிகளுக்கு சிங்கள இராணுவம் என்ன, என்ன சன்மானங்களை வழங்கியிருக்கின்றது என்று கூடியிருந்த மக்களுக்கு தெளிவுபடுத்தப் பட்டது.


இவ்விதமாக ஒவ்வொருவரும் ஆதாரங்களுடன் அம்பலப்படுத்தப்பட்டபோது திரண்டிருந்த மக்கள் அதிர்ச்சியும், ஆத்திரமும் கொண்டனர்.

இத்தகைய உளவாளிகளுக்கு சிங்கள இராணுவ தலைமைப்பீடம்வழங்கியிருந்த அனுமதிப்பத்திரத்தையும் மக்களுக்குக் காட்டியபோது அவர்கள் ஆத்திரத்தின் உச்சிக்கே சென்றார்கள்.

வவுனியா தடைமுகாமிலோ அல்லது சிறிலங்காவில் எந்த ஒரு இராணுவ சோதனைக் கூடத்திலோ அந்த அனுமதிப்பத்திரத்தைக்காட்டினால் எந்தவித இடையூறுகளும் இல்லாது அந்த நபர் அனுப்பி வைக்கப்படுவார்.

அந்த அனுமதிப் பத்திரத்தில் 'இவர் எங்களுடைய ஆள்' எனக்குறிப்பிட்டு இராணுவத்தினருக்கு இவரை அறிமுகப்படுத்தும் வண்ணம் கொழும்பு கூட்டுபடைத்தலைமையக உயர்அதிகாரி ஒருவர் கையெழுத்து வைத்திருக்கின்றார்.

எமது மக்கள் மீது நடாத்தப்படும் இனப்படுகொலைகளும், குண்டுவீச்சுகளும், பொருளாதாரத் தடைகளும், இராணுவ நடவடிக்கைகளும் (2ஆம் பக்கம் பார்க்க)



තැ. පෙ. / அ. பெ. / P. O. Box 1577

දුරකථන / தொலைபேசி / Telephones 575288 574173 574174

මගේ අංකය / எனது எண் / My No.

ඔබේ අංකය / உமது எண் / Your No.

ක්‍රියාන්විත මූලස්ථානය, රාජ්‍ය ආරක්ෂක අමාත්‍යාංශය
நடவடிக்கை தலைமைச்செயலகம், தேசிய பாதுகாப்பு அமைச்சு
OPERATIONAL HEADQUARTERS, MINISTRY OF DEFENCE

අංක 80, සර් අර්නස්ට් ද සිල්වා මාවත, කොළඹ 07
இல. 80, சேர் எர்னஸ்ட் த சில்வா மாவத்தை, கொழும்பு 07
No. 80, Sir Ernest de Silva Mawatha, Colombo 07

දිනය / திகதி / Date: 1991 ජුනි 17 දින

ආරක්ෂක හමුදා මුරපොලවල් වෙත

ආරක්ෂක හමුදාවන්ට උදව් කරන අය

1. මෙහි පහත සඳහන් අය ආරක්ෂක හමුදාවන්ට උදව් කරන අය බැවින් ඔවුන් පරීක්ෂා කර බැලීමෙන් පසු හැකි ඉක්මනින් මුදාහැරීමට කටයුතු කරන මෙන් ඉල්ලා සිටිනු ලැබේ.

නම :- මුරුගේසු ධර්මරාජන්

ලිපිනය :- අංක 199, සීනන්ද පුරම අත්තරායන්තුලම්.

හැ: අංකය :- 462922655 V

Staff Officer
Operational Headquarters
Ministry of Defence.

இராணுவம் வழங்கிய அனுமதிப்பத்திரம்

## வரி விளம்பரம்

### பேக்கரிக்கு ஆள் தேவை

அநுபவமுள்ள பாஸ், மேசை வேலையாள், தட்டுவேலையாள் உடனடியாக தேவைப்படுகின்றார்கள். தகுதி உள்ளவர்கள் நற்சான்றுப் பத்திரத்துடன் நேரில் வரவும். பாண்டியன்தாழ்வு பேக்கவுஸ், 65, கொழும்புத்துறை வீதி, பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம். (2227)

### ENGLISH GRAMMAR AND SPOKEN ENGLISH

3 மாத ஆங்கிலப் பயிற்சி ஆங்கில விரிவுரையாளர் கந்தசாமியினால் நாளை ஞாயிறு ஆரம்பிக்கப்படுகிறது V. N. Kandasamy A. I.B Part I (London) Intre, (London) 87, கொக்குவில்r திருநெல்வேலி றோட், கொக்குவில். (2228

### விற்பனைக்கு

அன்னபேதி - புகையிலை பதப் படுத்துவோருக்குரியது. ஒரு கிலோ ரூபா 75/- க்குமேல் (புகையிலை இருமாற்று) திருமதி க. சத்தியவதனி, சுதுமலை தெற்கு, மானிப்பாய். (2231)

### தேசத்

இப்படியாக இன்னோரன்ன தமிழ் இன அழிப்பு நடவடிக்கைகளும் இந்தகூட்டுப்படைத் தலைமையகத்திலிருந்தபடியே தான் நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பது குறிப்பிடத் தக்கது.

எனவே சிங்கள ஆயுதப் படைகளின் தலைமையகத்திலிருந்து பெற்ற அனுமதிப்பத்திரங்களுடன் உளவு வேலைகளில் ஈடுபடும் இந்த உளவாளிகள் எவ்வளவு ஆபத்தானவர்கள் என்பது சொல்லாமலே விளங்கும்.

திருநெல்வேலிச் சந்தியில் இந்த அம்பலப்படுத்தல் நிகழ்ச்சி நடைபெற்ற போது ''நாலாயிரம் ரூபாவுக்கும், எண்ணாயிரம் ரூபாவுக்குமாக எங்கட இளங்குருத்துகளையே கொல்லுறியளோடா'' என ஒரு வயோதிப மாது ஆத்திரபட்டுக் கத்தினார்.

உவங்கட பிள்ளையளின்ர இருப்பிடங்களை படங்கீறிக் காட்ட உந்தக் கல்நெஞ்சக் காரர்களுக்கு எப்படி மனம் வந்துதோ...! என்றார் இன்னொருவர்.

மானிப்பாயில் நடந்த கூட்டத்தில் இவர்களது காட்டிக் கொடுப்புக்கள் பட்டியலிட்டுக் காட்டப்பட்ட போது கூடியிருந்த மக்களில் பலர் ஆத்திரமடைந்து காணப்பட்டனர். சிலர் அந்த உளவாளிகளைத் தாக்கவும் முற்பட்டனர். சிலர் கடுஞ்சொற்களால் வசைபாடினர்.

குருநகரில் இந்த அம்பலப் படுத்தல் நிகழ்ச்சி நடைபெற்ற போது கூடியிருந்த மக்களிடம் எமதும், எமது மக்களினதும் எண்ணிலாத் துன்பங்களுக்கும் இழப்புகளுக்கும் காரணமான இக் கோடரிக்காம்புகளுக்கு என்ன தண்டனை கொடுக்கலாம் என நீங்கள் கருதுகின்றீர்கள் என பேச்சாளர் ஒருவர் கேட்டதற்கு ''மரணதண்டனை தான் சரியானது'' என மக்களிடமிருந்து பதில்வந்தது.

இதே போன்று அம்பலப் படுத்தல் நிகழ்ச்சி நடந்த அனைத்து இடங்களிலும் இவ் உளவாளிகளின் செயல்களைக் கண்டு மக்கள் ஆத்திரமடைந்தனர்.

எமது மண்ணிலேயே, எம்முடனேயே இருந்துவிட்டு இப்படியும் எதிரிக்குத் தகவல்களைக் கொடுத்து தாம் பிறந்த மண்ணுக்கு இவர்கள் துரோகம் செய்கின்றார்களே என பலரும் கோபமடைந்தனர்.

இத்தகையவர்கள் எமது மண்ணில் நடமாடக்கூடாது என்பதே எல்லோரினதும் உணர்வாக இருந்தது.

# கொழும்பு செல்லும் நோயாளர் கவனத்திற்கு

யாழ். போதனா வைத்திய சாலையின் வைத்திய நிபுணர்களினால் சிகிச்சை பெறக் கொழும்பு செல்வதற்காகத் தெரிவு செய்யப்பட்ட சகல நோயாளர்களையும் அவர்களுக்கு உதவிபுரியச் செல்லும் நெருங்கிய உறவினர்களையும் தங்களுக்குத் தேவையானஇரு நாட்களுக்குரிய உணவு, குடிநீர், மருந்து வகைகளுடன் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ். பொது மருத்துவ மனைக்கு வரும்படி வைத்திய சாலைப் பணிப்பாளர் செல்வி நவமலர் கனகரத்தினம் கேட்டுக் கொண்டுள்ளார்.

விரைவில் கொழும்பு செல்ல உள்ள இக்கப்பலில் 40 நோயாளர்கள் வரை யில்செல்லஉள்ளதாக இவர் அறியத்தருகிறார்

# 31-ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
17.02.1923

மறைவு
17.01.1992

## சிவசம்பு இராசையா

எங்கள் எல்லோரையும் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புத்தெய்வமே நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து இன்றுடன் 31-ம் நாள் பூர்த்தியாகின்றது தங்களின் நினைவு எங்களை விட்டு அகலாது தங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் ஏங்கித் தவிக்கும்
அன்பு மனைவி
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்
மருமக்கள், உறவினர்கள்
நண்பர்கள்

லிங்கம் ஸ்ரோர்ஸ்
தண்ணீரூற்று,
முள்ளியவளை.

அந்தியேட்டிக்கிரியைகள் 16.02.1992 இல் இடம்பெற்றது.

(2230)

கட்டைவேலி - நெல்லியடி
ப. நோ. கூ. சங்கம்
(மட்டுப்படுத்தப்பட்டது)

# பதவி வெற்றிடம்

பதவி: கணக்காளர்

தகைமைகள்:

அ) கூ. வே. ஆணைக்குழுவின் 8ஆவது சம்பளத் திட்டத்தில் கணக்கியல் / உள்ளகக் கணக்காய்வு பதவியில் 3 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூ. வே. ஆ. குழுவின் 9ஆவது சம்பளத் திட்டத்தின் உள்ளக கணக்காய்வாளர் / கணக்கியற் பகுதியில் 6 வருடங்களுக்குக் குறையாதஅனுபவம்.

அல்லது

ஆ) ஐக்கிய சாம்ராஜ்ய கல்விநிலையத்தில் கணக்கு பதிவாளர் இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்த கணக்கியல் பகுதியில் 4 வருடங்கள் மேற்பார்வை செய்த அனுபவங்கள் அல்லது வர்த்தக நிறுவனம் அல்லது கைத்தொழில் நிறுவனத்தில் எண்பார்வை செய்த அனுபவம்.

அல்லது

இ) கூ. வேலையாளர் தராதரப் பத்திரம் (உயர்தரம்) சித்தி / க. பொ. த. உயர்தரம் கணக்கியல் பாடத்துடன் மூன்று பாடங்களில் சித்தியுடன் வெளிக்கள கணக்கியல் / எண்பார்வை பகுதியில் 6 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

சம்பள அளவுத்திட்டம்:
104/7 09 1165-60x 3-75x 11 2170/-

குறிப்பு:- விண்ணப்பங்கள்யாவும் 01.03.92-ம் திகதிக்கு முன்னதாக தலைவர் கட்டைவேலி நெல்லியடி ப. நோ. கூ. சங்கம், கரவெட்டி, என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

தலைவர்

கட்டைவேலி- நெல்லியடி,
ப. நோ. கூ. சங்கம்,
கரவெட்டி.

(சி 3949)

# விற்பனையாளர் தேவை

நகரிலுள்ள புத்தகக்கடைக்கு விற்பனையாளர் தேவை. இருபாலாரும் சுயவிபர விண்ணப்பத்துடன் 25-2-92 காலை 9 மணிக்கு ஈழநாதம் காரியாலயத்திற்கு நேரில் வரவும். (2233)

கிளிநொச்சி மாவட்டம்
கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் பிரிவு
இலங்கை செஞ்சிலுவைச் சங்கக் கிளை
புதிய பணிமனை

# திறப்பு விழா

அன்புடையீர்,

காலம் :- 1992-02-23 ஞாயிற்றுக்கிழமை,
நண்பகல் 12.30 மணி.

இடம் :- பரந்தன், முல்லைத்தீவு வீதி, 7ஆம் கட்டைச் சந்தி, புளியம்பொக்களை.

மங்கள விளக்கு ஏற்றுபவர் :-
திரு. வே. விஜயரத்தினம்(செயலாளர் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம், கிளிநொச்சி மாவட்டம்)

ஆரம்பித்து வைப்பவர் :
திரு. சு. சிவராஜலிங்கம் (தலைவர், கிளிநொச்சி மாவட்ட செஞ்சிலுவைச் சங்கம்)

பிரதம விருந்தினர் :
திரு. க. பொன்னம்பலம் [கிளிநொச்சி அரச அதிபரும் மாவட்ட ஆணையாளரும்]

தயவு கூர்ந்து மேற்படி திறப்பு விழாவிற்குச் சமுகம் தந்து சிறப்பிக்குமாறு மிகவும் அன்புடன் வேண்டுகின்றோம்.

இங்ஙனம், தங்கள் நல்வரவை நாடும்

ஐ. நடராசா
தலைவர்
[E.O.A. கச்சேரி
கிளிநொச்சி]

சு. தர்மரட்ணம்
செயலாளர்
[E. O. கல்விக் கந்தோர்
கிளிநொச்சி]

இரத்ததானம் ...உயிர்காக்கும்
Give Blood......Save Life

(சி/3951)

# நினைவு கூருகின்றோம்

## 1992-02-22

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் மன்னார்த் தீவில் சிறிலங்காப்படையினரின் திடீர்த் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**லெப். சிறிநாத்** [விறாஸ்பிள்ளை அன்ரன்பேனாட் தயாநிதி - பரப்பாங்கண்டல், மன்னார்]

**வினோத்** [மாசில்லாமணி குலாஸ் மைக்கல் குலாஸ் - பரப்பாங்கண்டல், மன்னார்]

யாழ். கோட்டைக்கு முன்பாக சிறிலங்காப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட யாழ். பல்கலைக்கழக மாணவன்.

தலவாக்கொல்லையில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட சென் - கூம்ஸ் தோட்டத் தொழிலாளி

1988ஆம் ஆண்டு பூநகரி 4ஆம் கட்டையில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**தம்பி** [ ]

1989ஆம் ஆண்டு கோண்டாவில் புகையிரத நிலையப் பகுதியில் தேச விரோதிகளால் அடித்துக் கொல்லப்பட்ட - மட்டக்களப்பைச் சேர்ந்த இளைஞன்

நெல்லியடியில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட மருத்துவமனைக் காவலாளியான பொதுமகன்

1991ஆம் ஆண்டு கட்டுவனில் சிறிலங்காப்படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**லவநிதா** [றதிமலர் கார்த்திகேசு - கரம்பொன், ஊர்காவற்றுறை]

**சங்கரி** [மதுராந்தி விமலநாதன் - திருக்கடலூர், திருக்கோணமலை]

ஆனையிறவில் தவறுதலாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எம்மைப் பிரிந்த

**சுதாங்கனி** [தில்லையம்பலம் சுதா - இராமநாதபுரம், வட்டக்கச்சி, கிளிநொச்சி]

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**விடுதலைப் புலிகள்**
**மக்கள் முன்னணி**

(சி/3950)

# பஞ்சாப் மாநில தேர்தல்களில் இந்திரா காங்கிரஸ் வெற்றி

(டில்லி)

பஞ்சாப் மாநிலத்தில் நடைபெற்ற தேர்தல்களில் காங்கிரஸ் கட்சி பெரும் வெற்றியீட்டியிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. லோக் சபைக்கான பதின்மூன்று தொகுதிகளில் பன்னிரண்டு தொகுதிகளில் காங்கிரஸ்கட்சி அமோகமான வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டியுள்ளது. நூற்றுப் பதினேழு உறுப்பினர்களைக் கொண்ட சட்டப்பேரவைத் தேர்தலில், மூன்றிலிரு பங்கு பெரும்பான்மைப் பலத்துடன் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றுள்ளது

காங்கிரஸ் கட்சி பெற்றுள்ள மகத்தான வெற்றியை பிரிவினைவாத மற்றும் வதப்புவாத சக்திகளுக்கு பெருந்தோல்வியென கட்சிவட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.

இதேவேளை தேர்தலுக்குப் பின்னான நிலைமை குறித்து ஆராயவும், ஆட்சி அமைப்பது பற்றி ஆலோசனை கலக்கவும் பஞ்சாப் பிராந்திய காங்கிரஸ் கட்சியினர் புதுடில்லிக்கு பயணமாகியுள்ளனர்.

## ஐ.நா. சபையின் பாதுகாப்புப்பகுதியிலிருந்து இஸ்ரேல் விலக வேண்டும்

[ஜெனீவா]

தெற்குலெபனானில் ஐ நா. பாதுகாப்புப் பகுதியிலிருந்து தனது படையினரை இஸ்ரேல் விலக்கிக்கொள்ள வேண்டும் என்று ஐ நா. தலைமைச்செயலாளர் பூட்டர்ஸ்காலிகேட்டுக் கொண்டுள்ளார்.

நடப்பு நிலைமைகள்கவலை தருபவையாக இருக்கின்றன எனக் கூறியுள்ள திரு. பூட்டர்ஸ்காலி, இஸ்ரேல் தூதுவரை அழைத்து ஐ. நா. சபையின் நிலைமையைத் தெளிவுபடுத்தினார். பதினேழு டாங்கிகள், புல்டோசர் மற்றும் ஹெலிகொப்டர்கள் உதவியுடன் சுமார்முந்நூற்றிஐம்பது படையினர் ஐ.நா. அமைதிப்பிராந்தியத்திலுள்ள ஏக்டாகாப்ரா நகரத்தைக் கைப்பற்றியுள்ளனர்.

இதே வேளை, தெற்குலெபனானில் சண்டையை உடனடியாக நிறுத்திக் கொள்ளுமாறு இஸ்ரேல் லெபனான், மற்றும் சிரியாவை, அமெரிக்கா கேட்டுக் கொண்டுள்ளது.

## தென் ஆபிரிக்காவில் மக்கள் ஆதரவைக்கண்டறிய கருத்.கணிப்பு நடைபெறும்

(யோஹானஸ்பேர்க்)

தென் ஆபிரிக்காவில் மேற்கொள்ளப்பட்டு வரும் அரசியலமைப்பு சீர்திருத்தங்களுக்கு மக்களிடையே உள்ள ஆதரவைக் கண்டறிவதற்காக கருத்துக் கணிப்பொன்றை நடத்தப் போவதாகவும் இக்கருத்துக் கணிப்பில் தாம் தோல்வி காணுமிடத்தில் பதவி விலகப் போவதாகவும் தற்போதைய தென் ஆபிரிக்க அதிபர் டி கிளார்க் கூறியுள்ளார்.

## பஞ்சாப் தேர்தல்களில் முறைகேடு நடந்துள்ளது —பொம்மை

பஞ்சாப் தேர்தல்களில் முறைகேடுகள் நடத்திருப்பதாக ஜனதாதள் தலைவர் எஸ் ஆர். பொம்மை குற்றஞ் சாட்டியுள்ளார்.

புவனேஸ்கரில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய அவர் கலகத்தினால் பாதித்த இந்த மாநிலத்தின் பிரச்சினைகள் தேர்தல்களினால் மட்டும் தீர்த்துவிடாது என்று குறிப்பிட்டார்.

## குற்றச்சாட்டு

அடுத்த மே மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தாம் போட்டியிடுவதைத் தடுக்க பிலிப்பைன்ஸ் தேர்தல் ஆணைக்குழுவினர் முயற்சி செய்வதாக இமெல்டா மார்க்கோஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

## 13 பேர் பலி

மலேஷியாவில் உள்ள போர்னியோ தீவில் சாபா மாநிலத்தில் படகு விபத்தில் பதின்மூன்று இந்தோனேஷியர்கள் இறந்துள்ளனர்.

## நாற்பது சத வீத மக்களே பஞ்சாப்பில்வாக்களித்தனர்

(புதுடில்லி)

பஞ்சாப் மாநிலத்தில்நடந்த தேர்தல்களில் நாற்பது சத வீதத்திற்கும் குறைவான மக்களே வாக்களிப்பில்கலந்து கொண்டதாக சுயாதீன செய்திகள் தெரிவிக்கின்றன. தேர்தல்கள் நடத்தப்படுவதற்காக பெருமளவு படையினர் குவிக்கப்பட்டிருந்தமையும், சீக்கிய மக்களின்பெரும்அரசியல் சக்தியான அகாலிதளத்தின் பல பிரிவுகளும் தேர்தலைப் புறக்கணித்தமையும் தெரிந்ததே.

### தேர்தல் முடிவுகள்

| | |
|---|---|
| சட்ட சபைக்கான தொகுதிகளின் எண்ணிக்கை | 117 |
| இதுவரை அறிவிக்கப்பட்ட முடிவுகள் | 115 |
| காங்கிரஸ் கட்சி | 87 |
| பகுஜன் சமாஜக்கட்சி | 09 |
| பாரதிய ஜனதாக்கட்சி | 06 |
| கம்யூனிஸ்ட்சட்சி | 04 |
| அகாலிதளம் காபூல் பிரிவு | 03 |
| மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்கட்சி | 01 |
| ஜனதாதளம் | 01 |
| சுயேட்சைகள் | 06 |

பஞ்சாப் மாநிலத்தில் உள்ள பாராளுமன்றத் தொகுதிகள் பதின்மூன்றில் இதுவரை முடிவுகள் அறிவிக்கப்பட்ட பன்னிரண்டு தொகுதிகளிலும் காங்கிரஸ்கட்சியே வெற்றி பெற்றுள்ளது.

## பேச்சில் கலந்த பாலஸ்தீனர் இருவர் கைது

(ஜெரூசலம்)

மத்திய கிழக்கு சமாதானப் பேச்சு வார்த்தைகளில் கலந்து கொண்ட பாலஸ்தீனத் தூதுக்குழுவின் இரு உறுப்பினர்களை இஸ்ரேல் கைது செய்துள்ளதென்று பாலஸ்தீன வட்டாரங்கள் கடந்த திங்களன்று தெரிவித்தனர்.

முகம்மத்குராணி ஜமாஸ் அல்சௌபாகி ஆகிய இருவருமே கைது செய்யப்பட்டனரெனவும் கடந்த அக்டோபரில் மட்றிட்டில் நடைபெற்ற மத்திய கிழக்கு சமாதான பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்ட பாலஸ்தீன குழுவின் சிரேஷ்ட உறுப்பினரான ஹனான் அஸ்வாரி தெரிவித்தார்.

இருவரும் கைது செய்யப்பட்டதை ஊர்ஜிதம் செய்த இராணுவ பேச்சாளர் ஒருவர் ஆறுமாத காலத்துக்கு விசாரணை எதுவுமின்றி தடுப்புக் காவலில் வைக்கும் சட்டத்தின் கீழ் இருவரும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்தார்.

இருவரும் கைது செய்யப்பட்ட சமயத்தில் எந்த விதமான பேச்சுவார்த்தைகளிலும் ஈடுபடவில்லையெனவும் ஆனால் பல்வேறு விடயங்களிலும் கலந்து பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதற்காக பாலஸ்தீனியர்கள் தங்கள் பேச்சுவார்த்தைக்குழுவைவிஸ்தரித்துள்ளனர் எனவும் அஸ்வாரி தெரிவித்தார்.

அடுத்த வாரத்தில் நான்காவது சுற்று சமாதானம் பேச்சுவார்த்தைகள் வாஷிங்டனில் நடைபெற இருக்கின்றன.

## காஷ்மீர் பற்றி ஐ.நாவில் பாகிஸ்தான் கேள்வி எழுப்பும்

### அமைச்சர் அறிவிப்பு

[இஸ்லாமாபாத்]

காஷ்மீர் பிரச்சினையை ஐக்கிய நாடுகள் சபையில் எழுப்புவதற்குப் பாகிஸ்தான் முடிவு செய்துள்ளதென்று காஷ்மீர் விவகாரங்களுக்கான பாகிஸ்தான் அமைச்சர் சர்தார் மெஹதாப் திங்களன்று தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 28 ஆம் திகதி ஆரம்பமாக இருக்கும் ஐக்கிய நாடுகள் சபைக் கூட்டத்தில் இந்தியாவுடன் நீண்டகாலமாக இருந்து வரும் காஷ்மீர் பிரச்சினை எடுத்துக் கொள்ளப் படுமென்று அமைச்சர் மெஹதாப்பை மேற்கோள் காட்டி பாகிஸ்தான் அசோஷியட்டட் பிரஸ்செய்தி ஒன்றை வெளியிட்டிருந்தது.

இம்முறையானது இஸ்லாமாபாத்தின் கொள்கையில் பாரிய திருப்பம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. ஆயிரக்கணக்கான காஷ்மீர் தீவிரவாதிகள் யுத்த நிறுத்தக் கோட்டைத் தாண்டி இந்தியாவின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள காஷ்மீருக்குள்புகுவதற்கு முயன்றதைத் தொடர்ந்தே மெஹதாப் இம்முடிவை வெளியிட்டார்.

காஷ்மீரில் கடந்த இரு வருடகாலமாக நடைபெற்று வரும் பிரிவினை வாதப் போராட்டத்தில் சர்வதேச சமூகம் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது.

1948ஆம் ஆண்டில் பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையில் நடைபெற்ற யுத்தத்துக்குப் பின்னர் காஷ்மீரில் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்று நடத்தப்பட வேண்டுமென்று ஐ. நா. பாதுகாப்புச் சபை தீர்மானத்தை நிறைவேற்றியிருந்தது. இரு நாடுகளும் மீண்டும் 1965ஆம் ஆண்டில் காஷ்மீர் தகராறு குறித்து சண்டையிட்டன. தகுந்த நேரத்தில் பாகிஸ்தான் ஐ. நா. சபையிடம் செல்லுமென்று பாகிஸ்தான் வெளிநாட்டமைச்சு முன்னர் அறிவித்திருந்தது ஆனால் மெஹதாப்பின் அறிக்கையிலிருந்து காஷ்மீர் பிரச்சினை எதிர்வரும் ஐ. நா. சபைக் கூட்டத்தில் எடுத்துக் கொள்ளப்படுமெனத் தெரிகிறது.

காஷ்மீருக்கான யாத்திரையை தடை செய்யுமாறு பாகிஸ்தானை வற்புறுத்திக் கேட்டுக்கொள்வதற்கு சென்ற வாரத்தில் இந்தியா ஐ. நா பாதுகாப்புச் சபையிலுள்ள ஐந்து நிரந்தர நாடுகளின் கூட்டுக் கூட்டம் ஒன்றைக் கூட்டியது

காஷ்மீர் இருநாடுகளுக்கு இடையிலான பிரச்சினையல்ல; அது ஒரு சர்வதேசப் பிரச்சினையாகுமென்ற பாகிஸ்தானின் நிலைப்பாட்டுக்கு இந்திய அரசாங்கம் ஆதரவு அளிக்கிறது எனவும் மெஹதாப் தெரிவித்தார்

ஐ நா. சபையின் மேற்பார்வையின் கீழ் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்று நடத்தப்படுவதை இஸ்லாமாபாத் ஏற்றுக் கொள்ளும் எனவும் மேற்படி பத்திரிகை தெரிவித்துள்ளது.

## ஜனதாதள இடதுசாரிக்கட்சிகள் அரசுக்குஎதிராகவாக்களிக்கும்

(டில்லி)

இந்தியப் பாராளுமன்றத்தில் குடியரசுத் தலைவர் உரை மீது நடக்கும் வாக்கெடுப்பின்போது அரசுக்கு எதிராக ஜனதாதளமும், மற்றும் இடதுசாரிக் கட்சிளும் வாக்களிக்கும் என்று ஜனதாதள தலைவர்களின் ஒருவரான ஜோர்ஜ் பெர்னாண்டஸ் கூறியுள்ளார்

நரசிம்மராவ் தலைமையிலான அரசாங்கம் நாட்டிற்கு எதிரான நடவடிக்கைகளை எடுத்ததாகக் கூறி அதற்காகவே இம் முடிவு எடுக்கப்பட்டதாக திரு ஜோர்ஜ் பெர்னாண்டஸ் பம்பாயில் செய்தியாளர்களிடையே பேசுகையில் தெரிவித்தார்.

## "அணு ஆயுத நாடாக யப்பான் உருவாகிவருகிறது"

யப்பான் ஒரு அணு ஆயுத நாடாக உருவாகி வருவதாக வட - தென் கொரிய பிரதமர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள். அதனைத் தடுக்க இருநாட்டுத் தலைவர்கள் கூட்டாக முயற்சி எடுப்பது எனவும் அவர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

இரு கொரியத் தலைவர்களுக்கும் இடையே வட கொரிய நகரமான பியாங்கொங்கில் நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தைகளின் போது இந்த இணக்கம் காணப்பட்டது.

இரண்டாவது உலகயுத்தத்தின் போது யப்பானினால் தவறாகப் பயன்படுத்தப்பட்ட கொரியப் பெண்களுக்கு நட்டஈடு வழங்கும் விடயம் பற்றி இரு கொரியாக்களும் யப்பானுடன் கூட்டாக பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் எனவும் தென்கொரியாவில் நிலைகொண்டுள்ள அமெரிக்கப் படை வாபஸ் பெறவேண்டும் எனவும் அங்கு கம்யூனிஸத்துக்கு எதிரான நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும் எனவும் வடகொரிய பிரதமர் ஆலோசனை தெரிவித்தார்.

## பத்திரிகையாளர் வேலை நிறுத்தம்

(சிறீநகர்)

ஜம்மு -காஷ்மீர் மாநிலத் தலைநகரான சிறீநகரில் இருக்கும் பி. பி. ஸியின் முகவரி இல்லத்தின் மீது குண்டுத் தாக்குதல் நிகழ்த்தப்பட்டுள்ளதையடுத்து சிறீநகரில் பத்திரிகையாளர்கள் மூன்று நாட்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். இம் மூன்று நாட்களில் இங்கிருந்து வரும் தினசரிகள் எதுவும் வெளியிடப்படமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## அணு ஆயுதம் குறித்துப்பேச யெல்சினுக்கதிகாரமில்லை

மேற்குலக நாடுகளின் தலைவர்கள் அணு ஆயுதக் குறைப்புப் பற்றி பேச்சுவார்த்தை நடத்தும்போது முன்னாள் சோவியத் யூனியனின் அணு ஆயுதங்கள் இருந்த அனைத்து குடியரசுகளையும் கலந்தாலோசிக்க வேண்டுமென உக்ரெயின் அதிபர் கேட்டுள்ளார் எனபி. பி.ஸி தெரிவித்துள்ளது.

அணு ஆயுதங்களை வைத்திருக்கும் பைலோரஷ்யா, கசாகிஸ்தான் உக்ரெயின் நாட்டுத் தலைவர்களைக் கலந்தாலோசிக்காமலேயே ரஷ்ய அதிபர் பொரிஸ் யெல்சின் ஆயுதக் குறைப்புக்கான யோசனைகளைத் தெரிவித்திருப்பதாக அவர் தெரிவித்துள்ளார் என்றும் பி. பி. ஸி தெரிவித்தது.

# ஈழத் தமிழர்களுக்கு தமிழக அரசு உபத்திரவமே செய்கிறது

**- டாக்டர் ராம்தாஸ்**

(சென்னை)

''ஈழத் தமிழர்களுக்குஉதவி செய்வதை விட உபத்திரவம் செய்வதே தமிழக அரசின் நோக்கம் போலும் தமிழீழத்தை உடனடியாக இந்திய அரசுஅங்கீகரிப்பதுஒன்றுதான் இந்தியாவிற்கும் தமிழகத்திற்கும் நல்லது; தமிழீழ மக்களுக்கும் பாதுகாப்பான ஒரே தீர்வு.'' என பாட்டாளி மக்கள் கட்சித்தலைவர் டாக்டர் ராமதாஸ் குறிப்பிட்டுள்ளார்.

தமிழகத்திலிருந்து வெளியாகும் 'ஜூனியர்போஸ்ட்' வாரந்தப் பத்திரிகைக்கு அளித்துள்ள பேட்டியொன்றிலேயே இவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தமிழகத்தில் விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளை ஒடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றி நிருபர் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கையிலேயே இதனைத் தெரிவித்தார்.

கர்நாடகத்தில் நடக்கும் வன்முறைகளைக் கண்டித்து தமிழகத்தில் நடைபெற்ற 'பந்த்' குறித்து கருத்துத் தெரிவிக்கையில் ''தமிழக மக்களின் உணர்வுகளைத் திசை திருப்பும் ஜெயலலிதா அரசால் இந்த பந்த் ஒழுங்கு செய்யப்பட்டது என்றும், கர்நாடகாவில் தமிழர்களை கொன்று குவித்தபின்னர் இங்கே பந்த் நடத்தி மேலும் தமிழர்களை தொல்லைப்படுத்தக் கூடாது'' என்று தெரிவித்தார்.

கர்நாடகாவிற்கு பாட்டாளி மக்கள் கட்சி மேற் கொண்ட பயணம் குறித்து குறிப்பிடும் போது'' எங்களது பயணத்தின் மூலம் நாங்கள் பெற விரும்புவது இந்தியா உண்டா? இல்லையா? உண்டு எனில் ஒரே நாடா இல்லையா? என்ற கேள்விக்கான விடையைத்தான் இந்தியாவில் எங்கு வேண்டுமானாலும் செல்லலாம், வசிக்கலாம் என்று கூறும் தேசிய ஒருமைப்பாட்டின் இன்றைய நிலையை ஒருமுறை 'ரெஸ்ட்' பண்ணிப் பார்க்கவே இந்தப் பயணம் மேற்கொள்ளப்பட்டது'' என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## சென்னையில் மகளிருக்கான காவல் நிலையம்

(சென்னை)

மகளிருக்கு எதிரான கொடுமைகள் பற்றி விசாரிப்பதற்காக அனைவரும் மகளிர் அடங்கிய காவல் நிலையமொன்று சென்னையில் அடுத்த வாரம் திறக்கப்படவிருக்கின்றது. தமிழ்நாட்டில் இத்தகைய காவல் நிலையம் அமைக்கப்படுவது இதுவே முதன் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

# சி.பி.ஐயின் வாக்குமூலத்தை ஏற்றுக் கொள்ள வேண்டாம்

**--பாக்கியநாதன்**

(சென்னை)

தற்கொலை செய்து கொண்ட சிவராசனின் டயரி எனக் கூறப்படும் ஆவணம் ஒன்றின்உறுதிப்படுத்தப்பட்ட பிரதியைத் தருமாறு சி. பி. ஐயைபணிக்குமாறு சென்னை விஷேட நீதி மன்றத்திடம் கோரிக்கை விடுத்து ராஜீவ் காந்தியின் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருக்கும் எஸ். பாக்கியநாதன் மனுச் செய்திருக்கிறார்.

மனுவில் பாக்கிய நாதன் பின்வருமாறு கூறியிருக்கிறார்; டயரி ஒன்றை என்னிடம் காட்டிய சி. பி. ஐ. அதிகாரிகள் இது சிவராசனுடையதா என்று கேட்டனர். எனக்குத் தெரியாது என நான் கூறினேன். இராமமூர்த்தியின் வீட்டுக்கும் சத்தியமூர்த்திபவனுக்கும் புகைப்படப்பிடிப்பாளர் ஹரிபாபுவுடன் சிவராசன் சென்றது தொடர்பானவிபரங்கள் அடங்கிய சில பக்கங்களை அதிகாரிகள் எனக்குக் காட்டினர்.

இராமமூர்த்திக்கும், சிவராசனுக்கும் ஹரிபாபுவுக்கும் இடையே இருந்திருக்கக்கூடிய தொடர்புகளை மறைத்துவிட சி. பி. ஐ. முயற்சிக்கக் கூடுமென நான் அஞ்சுகிறேன்.

சி. பி. ஐ. அதிகாரிகள் என்னை சித்திரவதை செய்தனர். சி. பி. ஐயினால் பதிவு செய்யப்பட்ட எனது வாக்குமூலத்தை ஏற்றுக் கொள்ள வேண்டாம். என்னிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட உடைமைகளை திருப்பித்தருமாறு பணிக்க வேண்டும்,

எனது சகோதரி கல்யாணியிடம் எனது அச்சகத்தை ஒப்படைக்குமாறும் பணிக்க வேண்டும்.

இதேவேளை, தனக்கும் சிவராசனுக்கும், ஹரிபாபுவுக்கும் எதுவித தொடர்பும் இல்லை என வாழப்பாடி இராமமூர்த்தி அறிக்கைவிடுத்திருக்கிறார்.

பாக்கியநாதன் விசேட நீதிமன்றில் செய்திருக்கும் மேற்படிமனுதொடர்பான கருத்து வெளியிட்ட இராமமூர்த்தி "இதில் எதுவித உண்மையுமில்லை உண்மைதிரிபுபடுத்தப்பட்டுள்ளது. அதைத்தவிர வேறு ஒன்றுமில்லை. சிவராசனுக்கும்ஹரிபாபுவுக்கும் எனக்கும் இடையே எனது வீட்டில் அல்லது சத்தியமூர்த்திபவனில் சந்திப்பு இடம் பெற்றதாக மனுவில் குறிப்பிடப் பட்டுள்ளது. அத்தகைய சந்திப்பு நிகழவே இல்லை. எனக்கும் கட்சிக்கும் எதிராக பிரசாரம் செய்யவும் ராஜீவ் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள சிலரை பிணையில் விடுவிக்கவும் மேற்கொள்ளப்படும் ஆழமான சதியின் அங்கமே இது எனக் கூறியுள்ளார்.

# தமிழக அரசின் ஆணைக்கு நடுவர் மன்றம் தடை

(சென்னை)

தமிழக அரச ஊழியர்கள் ஆர்ப்பாட்டம், தர்ணா, உண்ணாவிரதம் ,கூட்டுவிடுப்பு வேலை நிறுத்தம் போன்றவற்றில் ஈடுபடாமல் தடை விதிக்கும் மாநில அரசின் ஆணைக்கு தமிழக அரச ஊழியர் குறைகளை விசாரிக்கும் நடுவர் மன்றம் இருவார கால தடையுத்தரவு விதித்துள்ளது.

அரசின் ஆணையை ஆட்சேபித்து மாநில அரசின் ஊழியர்கள் நடுவர் மன்றத்தில் தாக்கல் செய்த மனுவை விசாரித்த பின் இந்த உத்தரவை நடுவர் மன்றம் பிறப்பித்துள்ளது.

# உடற்கல்வி ஆசிரியருக்கு பயிற்சி வழங்கத் திட்டம்

உடற்கல்வி ஆசிரியர்களாக நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கு உடற்கல்வி நெறியில் ஆசிரிய பயிற்சி வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தொலைக்கல்விமூலம் அளிக்கப்படவிருக்கும் இவ் ஆசிரியர் பயிற்சி நெறிக்கான நேர்முகப் பரீட்சை யாழ். இந்துக் கல்லூரியில் இயங்கிவரும் தொலைக்கல்வி பயிற்சி நிலையத்தால் வழங்கப்படும் எனவும், இதற்கான நேர்முகப் பரீட்சை இன்றும் நாளையும் யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும்எனவும்,தொலைக்கல்விப் பயிற்சிக்குப்பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம். எஸ்.அலெக்சான்டர் தெரிவித்தார்.

இந்த நேர்முகப் பரீட்சைக்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களிலுள்ள உடற் கல்வி ஆசிரிய நியமனம் பெற்ற அனைவரும் தோற்றலாமெனவும், தமது கல்விச்சான்றிதழ்' முதல் நியமனக்கடிதம், விளையாட்டுத்துறை சான்றிதழ்கள் பிறப்புச்சாட்சிப்பத்திரம் ஆகியவற்றுடன் சமூகம் கொடுக்குமாறும் இவ்வாசிரியர்கள் கோரப்படுகின்றனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் தொலைக்கல்வி நெறி ஆசிரியர்களுக்கான செயல்முறை அமர்வு இன்றும், நாளையும் நடைபெறும் எனவும், பயிற்சி மாணவர்களின் முதல் வருட இறுதி வருட பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்களிலும் ஆசிரிய மாணவர்கள் ஒப்பமிட வேண்டியுள்ளமையினாலும், இவ்வகுப்புகளில் தவறாது கலந்து கொள்ளுமாறும், சகல தொலைக் கல்வி பயிற்சி ஆசிரிய மாணவர்களையும் அலெக்சான்டர் கேட்டுள்ளார்.

# 106 மாணவர்களுக்கு பிரேமதாசா விருந்து

(கொழும்பு)

1991 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்றுதிறமைச் சித்தியடைந்த 106 மாணவர்களுக்கு இன்று 22 ஆம் திகதி சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா விருந்தளிக்கவுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்குக் கிழக்கு உட்பட நாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் அதிகபுள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் இந்த விருந்துபசாரத்திற்கு அழைக்கப்பட்டுள்ளனர் என்றும்,

அன்றைய தினம் பிரேமதாசா இந்த மாணவர்களுடன் அதிக நேரத்தை கழிக்கவுள்ளார் என்றும்,

அவர்களது எதிர்காலக் கல்விபற்றி உரையாடவும் உள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# இந்தியாவிலிருந்து மேலும் 3200 பேர் இல. திரும்புவர்

(கொழும்பு)

இந்த மாதத்தில் மேலும் மூவாயிரத்துஇருநூறு அகதிகள் இலங்கை வந்து சேர்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதாக புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் கிறிஸ்டி சில்வா கூறியுள்ளார். இவர்கள் இரண்டு கப்பல்கள் மூலம் திருக்கோணமலைக்குஆயிரத்து இருநூறு அகதிகளும், மூன்று கப்பல்கள் மூலம் ஆயிரத்து ஐந்நூறு அகதிகள் தலைமன்னாருக்கும் வந்துசேருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர்வாராந்த செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

# குறைகளை எவரும் பேச முடியாது பார்வையால் சுட்டெரித்து விடுவார்

**-- தொழிற் சங்கத் தலைவர் சுப்பு**

(சென்னை)

இன்று தமிழ்நாட்டில்உள்ள பிரச்சினைகளை மந்திரிகளால் கூட பேசமுடியாது. பேசினால் முதல்வர் ஜெயலலிதா நக்கீரப் பார்வை பார்த்து சுட்டெரித்து விடுவார். இவ்வளவு மோசமான நிலையில்அரசியல் உள்ளது என காங்கிரஸ் [ஐ] தொழிற்சங்கத் தலைவர் சுப்பு தெரிவித்துள்ளார்.

அரச அலுவலக ஒன்றியத்தின் (என். ஜி. ஓ.) மண்டல மாநாட்டில் கலந்து கொண்டு பேசுகையிலேயே இவ்வாறு சுப்பு குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசிய சுப்பு; இந்திரா காங்கிரசும் தேர்தலில் ஜெயலலிதா அம்மாவிற்குத்தான் ஓட்டுப் போடுங்கள் என்று மக்களிடம் கேட்டோம் ஏனென்றால் அவர் முதல்வர் ஆவார்என்றுதெரிந்ததால் தான் வோட்டுப் போடச் சொன்னோம். இல்லையேல் சொல்லியிருக்கமாட்டோம்.அதனால் தான் அந்தஅம்மா இப்போதுநான் சொல்வதையே எல்லோரும் கேட்கவேண்டும் என்கிறார்.

இதைப்பார்க்க கோபம்வரத்தான்செய்யும் ஆனால்கோபப்பட்டு என்னபிரயோசனம். விபரம் உள்ளவர் முதல்வராக இருந்தால் பேசலாம் விவரம் கெட்ட அந்த அம்மாவிடம் போய் என்ன பேசுவது?.

சட்டமன்றத்தில் முன்னாள் முதல்வர் எம். ஜி. ஆர், படத்திறப்பு விழா நடந்தது. அந்த விழாவில் முதலமைச்சர் ஜெயலலிதா சபாநாயக்கர் ஆசனத்திலிருந்தார்!

சபாநாயகர் ஆசனத்தில் ஆளுநரைத்தவிர யாரும் அமரக் கூடாது என்பது மரபு. ஆனால் இப்போதெல்லாம் தலைகீழாகமாறிவிட்டதுசபாநாயகர் ஆசனத்தில் முதல்வர் அமர்ந்ததுஉலகத்திலேயேஇது தான் முதல் தடவை.

சட்டசபையில் குறைகளை எடுத்துச் சொன்னால் அங்கு இருக்கவேமுடியாதுஅப்படியே பேசி விட்டு இருந்தாலும் இடுப்பில் வேட்டி இருக்காது எனவே தொழிலாளர்களுடைய கோரிக்கைகளை இது போன்ற மாநாடுகள் மூலம் தான் எடுத்துச் சொல்ல முடியும்.

நமது துரதிர்ஷ்டம் கோரிக்கைகளை முதல்வரிடம் எடுத்துச் சொல்ல நேரம் வாங்குவது மிகவும் கஷ்டம். அரச அதிகாரிகளும் கொத்தடிமைகளாக இருப்பதால் அவர்களால் ஆலோசனை சொல்ல முடியவில்லை.

அரச ஊழியர் சங்கத்தினர் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு முதலமைச்சர் ஜெயலலிதாவை பார்க்கவே முடியவில்லை.

அரசால் அங்கீகாரம் பெற்ற ஒரு சங்கத்துடன் பேச்சு நடத்துவதில் என்ன தவறு இருக்கிறது.

ஜெயலலிதா முதலமைச்சராக இருப்பதால் தான் அரச ஊழியர்கள் அவரைப் பார்த்து பேசலாம் என்று சொல்கிறார்கள் ஆனால் அவரைப் பார்க்க முடியவில்லையே என வருத்தப்படுவது அரச ஊழியர்கள் மட்டுமல்ல எல்லோரும் தான் ஏனென்றால் யாருமே அந்த அம்மாவை பார்க்க முடிவதில்லை.

மத்திய உள்துறை மந்திரியே சென்னை வந்தார் அந்த அம்மாவை பார்க்க முடியாமல் ஊரெல்லாம் ரவுண்ட் அடித்துவிட்டு டில்லி சென்றார். சீனா. பாகிஸ்தான் போன்ற நாடுகளுடனும் சண்டையிட அதிகாரம் படைத்த மத்திய இராணுவ மந்திரியால் கூட ஜெயலலிதாவைப் பார்க்க முடியவில்லையே பின்னர் நீங்கள் பார்க்க முடியாமல் வருத்தப்படலாமா?

தேர்தலில் கூட்டணி அமைத்து போட்டியிட்டு இந்த அம்மையாரை முதலமைச்சராக்கிய வாழப்பாடி ராமமூர்த்திக்கு இன்டர்வியூ அப்பாயிண்ட் மென்ட் கிடையாது என்றும் சுப்பு தனதுரையில் குறிப்பிட்டார்.

## ஆசனத்திலிருந்து அரபாத் உரை

(நியூயோக்)

ஐ. நா. மனித உரிமைகள் ஆணைக்குழுகூட்டத்தில்உரையாற்றவுள்ள பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசிர் அரபாத் மேடையில் அல்லது தமது ஆசனத்திலிருந்த வண்ணமே உரையாற்றவுள்ளார்.

சிரேஷ்ட அமைச்சர்கள் மேடையில் இருந்தே உரையாற்றுவது வழக்கமாயினும் அரபாத்துக்கு இத்தகைய சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை.

## சிந்தனைக்கு

நீரில் உயிருக்காக ஒருவன் போராடிக் கொண்டிருக்கும் வரை அக்கறை எடுக்காமல் பார்த்துக் கொண்டிருந்து விட்டு. அவன் கரை மீண்ட பின்பு, உதவி அளித்து உபத்திரவம் செய்பவர்க்குப் பெயர் தானே புரவலர்!

- ஸேம்யல் ஜான்ஸன்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 22-02-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 3308
த. பெ. எண் 05

# அமைச்சர் ரணிலின் அர்த்தமற்ற கவலை

மத்திய ஊவா மாகாணங்களில் படையினருக்கு உதவ எவரும் இல்லையென சிறிலங்கா அமைச்சரவைப் பேச்சாளரான ரணில் விக்கிரமசிங்க கவலை தெரிவித்துள்ளார்.

இங்கு கவனிக்கப்பட வேண்டியது ராணுவத்துக்கு உதவ எவரும் இல்லை என்பதல்ல. மலையக மக்களுக்கு எதிராக இராணுவம் ஏவப்பட்டுள்ளது என்பது ஒன்று, மற்றது சொந்தமண்ணில் அந்நிய ராணுவத்தினருக்கு ஆதரவு கிடைக்கும் என்பதை எதிர்பார்ப்பது என்பது.

பிரித்தானியர் காலத்தில் பிரித்தானியரால் மலையகத்தில் குடியமர்த்தப்பட்ட மக்கள் காடாகக் கிடந்த நிலங்களைப் பொன் கொழிக்கும் பூமியாக மாற்றினார்கள். இன்று பெருமளவிற்கு அந்நியச் செலாவணியை சிறிலங்கா அரசிற்கு பெற்றுக் கொடுக்கும் இம்மக்களின் அடிப்படை உரிமைகளைக் கூடக் கொடுக்க முன்வராத அரசாங்கத்தின் இராணுவத்திற்கு எவ்வாறு ஆதரவினை அமைச்சர் எதிர்பார்க்கமுடியும்?

'கம் உதாவ' திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் ஒரு புறத்தில் வளர்ந்து கொண்டிருக்கிறது. ஆனால் மலையகத்தில் பிரித்தானியர் காலத்தில் கட்டப்பட்ட லயன்களே இன்றும் காணப்படுகின்றன. மேலும், மலையக மக்களுக்கு எதிராக அமைச்சரவையிலும், பாராளுமன்றத்திலும், வெளிப்படையாக இனவாதம் பேசப்படும் ஒரு நிலையிலும் இனரீதியாக அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கும் ஒரு நிலையிலும், மலையக மக்கள் இராணுவத்துக்கு உதவியாக இருப்பார்கள்என்று அமைச்சர் எவ்வாறு எதிர்பார்க்க முடியும்.

மறுவளமாக சர்வதேச ரீதியில் அந்நிய இராணுவம் சொந்த நாட்டிற்குள் புகுந்தபோது ஏற்பட்ட அனுபவங்களை சிறிலங்கா அரசு மறந்து விட்டது போல் தெரிகிறது.

ஆப்கானிஸ்தானுக்குள் பத்து வருடகாலமாக இருந்த சோவியத் யூனியனின் இராணுவம் எந்தவித வெற்றியையும் பெறாது திரும்பி விட்டது.

வெற்றி பெற வில்லை என்பது இங்கு பெரிய விடயமல்ல. அம் மக்களின் ஆதரவை அவர்கள் பெற்றுக் கொள்ளாமல் போனதே அவர்களது தோல்விக்கு முக்கிய காரணமாகக்கூட இருக்கிறது. மக்கள் போராளிகளுக்கு வழங்கிய ஆதரவுகளே அவர்கள் வெற்றி பெறாமல் போனதற்குக் காரணமாகும்.

இதே பாடத்தை அமெரிக்காவும் வியட்நாமில் பெற்றது.

இத்தகைய விடயங்கள் வேறு நாடுகளில் நடந்ததனால் சிறிலங்கா அரசிற்கு அதன் விபரங்களை அறிந்துகொள்ள வாய்ப்பில்லாமல் போய்விட்டது என்று கருதினாலும்-

வடக்குக் கிழக்கில் இந்திய இராணுவத்தினர் பெற்ற அனுபவத்தை இந்திய அரசு மட்டுமல்ல சிறிலங்கா அரசுமே இலகுவில் மறந்திருக்காது.

இரண்டரை வருடங்களாக தமிழீழப் பிரதேசங்களில் இருந்த இந்திய இராணுவம் தோல்வியுடன், இந்தியா திரும்பவேண்டிய நிலைக்குஉள்ளாக்கப்பட்டது

இந்திய ராணுவத்துக்கு எதிராக பொதுமக்கள் விடுதலைப் புலிகளுக்கு அளித்துவந்த பேராதரவே அவர்கள் தோல்வியுடன் இந்தியா திரும்புவதற்கு காரணமாக அமைந்தது.

இவ்வாறாக மலையக மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படாத ஒரு நிலையில், அவர்களால் உருவாக்கப்பட்ட மண்ணில் பதிந்துள்ள அந்நிய இராணுவத்திற்கு ஆதரவை சிறிலங்கா எவ்வாறு எதிர்பார்க்க முடியும்.

அந்நிய இராணுவத்தால் ஏற்பட்ட அழிவுகளை வரலாற்று ரீதியாக அறிந்த மக்கள் எவ்வாறு ஆதரவு அளிக்க முடியும்? இந்த நிலையில் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா ''மத்திய ஊவா மாகாணங்களில் படையினருக்கு உதவ எவரும் இல்லையென'' கூறுவது ஆச்சரியத்தையே அளிக்கின்றது.

# யுத்த நிறுத்த வாய்ப்பை அரசாங்கம் தவறவிட்டது

- அநுரா

(கேகாலை)

வடக்கு - கிழக்கில் நடைபெற்றுவரும் யுத்தத்தை நிறுத்திச் சமாதானத்தை ஏற்படுத்த அரசுக்குப் பல சந்தர்ப்பங்கள் கிடைத்தன. ஆனால் அரசு அதைச் சரியான முறையில் பயன்படுத்த தவறிவிட்டது. இதனால் வீண் விரயமும், மனித படுகொலையும் நாளுக்கு நாள் அதிகரித்துள்ளது இந்த அரசுக்கு எப்படியாவது ஆட்சியின் காலத்தை நீடிக்கவேண்டும் என்பது தவிரப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும் என்ற அக்கறை இல்லை என்று பதில் எதிர்க்கட்சித் தலைவர் அநுரா பண்டார நாயக்கா கூறினார்.

கேகாலை எம்பிலியாவல என்ற இடத்தில் நடைபெற்ற வைபவமொன்றில் பேசும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

தொடர்ந்து பேசுகையில் அவர் கூறியதாவது:

இன்று வடக்கு - கிழக்கு யுத்தத்தில் எமது இராணுவ வீரர்கள், பொலிஸ்காரர்கள் கொல்லப்படுவதாக கத்துகிறார்கள் இதற்கு யார் காரணம்? இந்த அரசாங்கமே காரணமாகும். யுத்தத்தை நிறுத்தப் பல சந்தர்ப்பங்கள் கிடைத்தன அரசு அதனைப் பயன்படுத்தவில்லை இதனால் புலிகளின் சக்தி கூடியது புலிகளுக்கு பங்கர்கள் அமைக்கச் சீமெந்து முதல் ஆயுதம்வரை கொடுத்து உதவியது இந்த அரசாங்கமே. ஆயுதங்களால் எமது இராணுவ வீரர்கள் கொல்லப்படுகிறார்கள். இதற்கான முழுப் பொறுப்பையும் இந்த அரசே ஏற்கவேண்டும்.

இந்த நாட்டில் சிறுபான்மையினரின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் அநுரா கூறினார்.

# கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டு வங்கிகள் சீரமைக்கப்படும்

-டி.பி. விஜயதுங்க

(கொழும்பு)

இலங்கை வங்கியும், மக்கள் வங்கியும் மறுசீரமைக்கப்பட உள்ளன என்று சிறிலங்கா பிரதமர் டி. பி. விஜயதுங்க தெரிவித்துள்ளார். இந்த இரு வங்கிகளும் தொடர்ந்தும் அரசாங்கத்திற்குச் சொந்தமான நிறுவனங்களாகவே இருந்து வரும் என்றும் அவர் கூறினார்.

இந்த இரண்டு வங்கிகளும் இன்று கடன் கொடுக்க முடியாத நிலைமைக்கு வந்துள்ளன. அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கு வழங்கப்பட்ட மீளாக்கடன்கள் ஆதரவாளர்களுக்கும் ஆதரவுபெற்ற தனியார் நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்ட ஆறு பில்லியன் ரூபா வரையிலான அறவிட முடியாக் கடன்கள், அவர்களுக்கு வழங்கப்பட்ட இயக்கமற்ற கடன்கள் என்பன இந்த சீரழிவிற்கு காரணமாகும். இவை சீர் செய்யப்பட்டிருப்பின் இந்த இரண்டு வங்கிகளும் லாபம் காட்டியிருக்கும்.

அடுத்த ஆண்டு முதல் அமுலுக்கு வர இருக்கும் பஸ்லே வழி காட்டலின் படி இலங்கை வங்கியும், மக்கள் வங்கியும் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலையில் இருப்பதால் அவை சர்வதேச வியாபாரங்களை செய்ய முடியாத நிலை ஏற்படும் என ஊகிக்கப்படுகிறது.

இந்த நிலைமை மாற்றப்பட வேண்டுமானால் இந்த வங்கிகளின் மூலதன அமைப்பு முற்றாக மீளமைப்பு செய்து கொள்ளப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த இரண்டு வங்கிகளும் போட்டியாக இயங்குவதற்கு இவற்றின் அன்றாட அலுவல்கள் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருந்து நீக்கப்பட வேண்டும். இதற்கு ஆளணிகள், ஆட்சேர்ப்பு, கடன் வழங்குதல் போன்ற பல்வேறு துறைகளில் திட்டங்களை வகுத்துக் கொள்ளும் சுதந்திரம் வங்கிகளுக்கு இருக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இது மக்கள் மயம் அல்ல எனவும் தெரிவித்தார்.

# அநுரா பண்டாரநாயக்கா அமெரிக்கா பயணம்

(கொழும்பு)

பதில் எதிர்க்கட்சித் தலைவர் அநுரா பண்டாரநாயக்கா கடந்த புதன்கிழமை அமெரிக்கா சென்றார்.

சகல விதமான இன வேறுபாடுகளையும் ஒழிப்பதற்கான இயக்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காகவே அநுரா அமெரிக்கா சென்றுள்ளார்.

ஐக்கிய நாடுகளுடன் இணைந்த இவ்வியக்கத்தின் சிரேஷ்ட உதவித் தலைவராக அநுரா 1976-ல் இருந்து பதவிவகித்து வருகிறார்.

'மத்தியகிழக்கின்அண்மைய நிலைபரங்களின் பின்னணியில் பாலஸ்தீன விவகாரம்' என்ற தலைப்பில் ஆய்வுக் கட்டுரை ஒன்றை அவர் வாசிக்கவிருக்கிறார்.

# மொனராகலை மாவட்டத்தில் பதுங்கு குழிகள் அமைப்பு

(மாத்தளை)

ஊவாப்பகுதியில் அங்குள்ள தோட்டங்களிலும், மொனராகலை மாவட்டத்தில் கிராமங்கள் தோறும் பதுங்கு குழிகள் அமைக்கப் போவதாக மொனராகலை பொலிஸ் அதிபர் ரோஹன் அபேகுணவர்த்தன தெரிவித்தார். வீதித் தடைகளை மேலும் விஸ்தரிக்கப் போவதாகவும் அவர் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்திலுள்ள புலிகள் பிபில, மஹியங்கனை வழியாக ஊவா மாகாணத்திற்குள் ஊடுருவ முயல்கிறார்கள் எனத் தகவல்கள் கிடைத்ததை அடுத்தே இந்த நடவடிக்கை என்றும் பொலிஸ் அதிபர் தெரிவித்தார்.

15 - 20 குடும்பங்களைக் கொண்ட ஒரு பகுதிக்கு ஒரு பதுங்குகுழி வீதம் அமைக்கப்படவுள்ளது.

# அரச கொள்கைகள் தொடர்ந்து பேணப்படும்

(கொழும்பு)

தோட்ட நிர்வாகங்கள் தனியாரிடம் ஒப்படைக்கப்பட்ட போதிலும் அரசாங்கக்காணிக் கொள்கை இத்தோட்டங்களில் தொடர்ந்து பேணப்படும் என்று தோட்டத் தொழிற்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்தியாவசிய தேவைகளுக்கு காணி வழங்கல் முதலானவை மேற்கொள்ளப்படுவதுடன் ஏற்கனவே அரசாங்க காணிக் கொள்கைத் திட்டத்திற்கேற்ப 35,000 ஏக்கர்காணி தோட்டங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன என்றும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

## நாடு திரும்பியோருக்கு

# நஷ்டஈட்டுடன் மேலதிக கொடுப்பனவும் வழ.படும்

வளைகுடா யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு நாடு திரும்பியோருக்கு நஷ்டஈட்டுடன் மேலதிக கொடுப்பனவுகளும் வழங்கப்படவுள்ளது.

வளைகுடா யுத்தத்தின் போது குவைத், ஈராக் ஆகிய நாடுகளிலிருந்து வெளியேறியவர்களுக்கு 2500 டொலர் முதல் 4000 டொலர் வரையான தொகையும் குடும்பத்திற்கு 4000 டொலர் முதல் 8000 டொலர் வரையான தொகையும் வழங்கப்படவுள்ளது. இந்த நஷ்டஈடு எப்போது வழங்கப்படும் என்று ஐக்கிய நாடுகளின் நஷ்டஈட்டுக்குழு விரைவில் அறிவிக்கும்

1990 ஆகஸ்ட் 2முதல் 1991 மார்ச்2ஆம் திகதிவரையிலான கால எல்லைக்குள் குவைத், ஈராக் ஆகிய நாடுகளிலிருந்து வெளியேறியவர்களுக்கு ஆகக் குறைந்தது 2500 டொலர் நஷ்டஈட்டுத் தொகையும், குவைத்தில் தங்கியிருந்தவர்களுக்கு 5000 டொலர் நஷ்டஈட்டுத்தொகையும் வழங்கப்படுவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

இந்த நஷ்டஈட்டுத் தொகையை பெற்றுக்கொள்ள எழுத்துமூல அத்தாட்சிப் பத்திரத்தை கொமிஷன் கேட்காது என்றும், எனினும் இந்தக் காலப்பகுதியில் ஒருவர் அங்கு தங்கியிருந்தமை நிரூபிக்கப்படல் வேண்டும் எனவும் கொமிஷன் முடிவு செய்துள்ளது.

# இடம் பெயர்ந்த மாணவர்களுக்கு நூல் விநியோகம்

ஊர்காவற்றுறைக் கொத்தணிப் பாடசாலைகளில் கல்வி பயின்று இடம் பெயர்ந்துள்ள அனைத்து மாணவர்களுக்கும் 1992ஆம் ஆண்டுக்குரிய இலவச பாட நூல்கள் யா/சென் ஜோன்ஸ் அக்கடமியில் அந்தந்த அதிபர்களினால் வழங்கப்படுகின்றன. இப்பாடசாலைகளில் கல்வி பயின்று வேறு பாடசாலைகளில் கற்கும் மாணவர்களும், அலுவலக நேரத்தில் இவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்.

# திறப்புவிழா

பரந்தன் முல்லைத்தீவு வீதி7 ஆம் கட்டைச்சந்தி புளியம்பொக்கணையில் இலங்கை செஞ்சிலுவைச்சங்க கிளை புதிய பணிமனை திறப்பு விழா எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை (23.2 92) நண்பகல் 12.30 மணிக்குநடைபெறவுள்ளது.

### தென் லெபனானுக்குள்

# ஊடுருவி தாக்குதல் நடத்திய இஸ்ரேலிய ராணுவம் வாபஸ்

(பெய்ரூட்)

தெற்கு லெபனானில் தன்வசப்படுத்திக் கொண்ட பகுதிகளிலிருந்து இஸ்ரேலிய படைகள் விலகிக் கொண்டு விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இப்பகுதிகள் முன்னர் இஸ்ரேலினால் தன்னிச்சையாக பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டிருந்தது.

நேற்று முன்தினம் இஸ்ரேலியப் படைகள் இந்தப்பிரதேசங்களில் நுழைந்து ஈரானிய ஆதரவு பெற்ற ஹிஸ்புல்லா இயக்க போராளிகளுடன் கடும் சண்டையில் ஈடுபட்டது தெரிந்ததே.

இது ஹிஸ்புல்லா தீவிரவாதிகளின் றொக்கட் ஏவுதளங்களை அழிக்க மேற்கொள்ளப் பட்ட தற்காலிக நடவடிக்கை எனவும் இதற்கு ஏழு டாங்கிகளே பயன்பட்டதாகவும் இஸ்ரேலிய இராணுவ தளபதி ஒருவர் தெரிவித்தார்.

(முன்னர் வந்த செய்தி மூன்றாம் பக்கத்தில்)

### அகதி முகாம்களில்

## தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழிளைஞர்கள் கைது

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டம் தம்பலகாமத்திலுள்ள அகதி முகாம்களில் இருந்த தமிழ் இளைஞர்கள் எல்லோரும் சிறிலங்கா இராணுவத்தால் பிடித்துச் செல்லப்பட்டுள்ளனர். இவர்கள்பற்றிய தகவல்களை அறியமுடியாது உறவினர்கள் கவலையடைந்துள்ளனர்.

தம்பலகாமத்தில் உள்ள அனைத்து தமிழ்மக்களும் பிடித்துச் செல்லப்பட்டு அகதி முகாம்களில் வைக்கப்பட்டிருந்தனர் முகாமைவிட்டு வெளியேற இவர்களுக்கு தடை விதிக்கப்பட்டிருந்தது. இந்த முகாமகளில் இருந்த எல்லா இளைஞர்களும் இராணுவத்தால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

### பாராளு. உறுப்பினர்கள்

## தங்குமிட வசதிக்காக 27 கோடி ரூபா ஒதுக்கீடு

### -ரணில் விக்கிரமசிங்கா

(கொழும்பு)

சிறிலங்கா பாராளுமன்ற உறுப்பினர்களுக்குப் பாராளுமன்றத்திற்குக் கிட்டிய தூரத்தில் தங்குமிட வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க 27 கோடி ரூபாவில் திட்டம் தீட்டப்பட்டுள்ளது என ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்தார்.

இதற்கென கடந்த ஆண்டில் 5 கோடி ரூபாவும், இந்த ஆண்டில் 5 கோடி ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே பாராளுமன்ற உறுப்பினர்களுக்குத் தங்குமிடவசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க அரசாங்கம் முயற்சிசெய்யவில்லை என எதிர்க்கட்சியினர் கூறுவது மக்களை தவறான வழிக்கு இட்டுச்செல்லும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## எறிகணை வீச்சு

(தெல்லிப்பளை)

பலாலி சிறிலங்கா இராணுவத்தினர் மக்கள் குடியிருப்புக்களை நோக்கி தொடர்ச்சியான ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

நேற்று இரவு 7.30 மணியளவில் ஏவப்பட்ட ஷெல்கள் தெல்லிப்பளைப் பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன. இதனால் ஏற்பட்ட சேதவிபரங்கள் தெரியவில்லை. (ச)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

பூனகரி, கல்முனைப் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரால் நேற்றுக்காலைஎறிகணைதாக்குதலும் 50 கலிபர் தாக்குதலும் நடத்தப்பட்டன. இந்த எறிகணைகள் அரியாலை கிழக்கு, கேரதீவுப் பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன.

இதேவேளை வளலாய் பகுதியிலுள்ள காவலரண்களிலிருந்தும் துப்பாக்கிப் பிரயோகம் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டது. (21)

### விபரம்

நாட்டில் மேற்கொள்ளப்பட்ட சகல இராணுவ நடவடிக்கைகளும் வெற்றியாக முடிந்துள்ளன என்று கூட்டுப்படைத் தலைமையகப் பேச்சாளர் கேணல் சரத் முனசிங்க கூறியுள்ளார். கொழும்பில் நடைபெற்ற வாராந்தச் செய்தியாளர் மாநாட்டில் பேசிய அவர் விபரம் எதையும் கூற மறுத்து விட்டார்.

### உதவிக்கு

வீரர்கள் வீராவேசத்துடன் போர் புரிந்தனர். அந்தச் சமயத்தில் இரண்டு குண்டுவீச்சு விமானங்கள், இரண்டு உலங்குவானூர்திகள், ஒரு அவ்ரோ விமானம் ஆகியன புலிகள் நிலைகள் மீது குண்டுகளைப் பொழிந்தன இத்தனைக்கும் மத்தியில் புலி வீரர்கள் துணிச்சலோடு எதிர்த்தாக்குதலை நடத்தியதால் உதவிக்கு வந்த படையணிகள் பின்வாங்கி ஓடின.

### உள்ளூர்

காட்சியில் தமது உற்பத்திப் பொருட்களை அறிமுகப்படுத்த விரும்பும் உள்ளூர் உற்பத்தியாளர் யாழ். மகளிர் அபிவிருத்தி நிலையத்துடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்படுகின்றனர்.

### 23 விமானப்

விமானப்படை தளத்திலிருந்து பத்தாம் கட்டை விமானப் படை முகாம் நோக்கிச் சென்று கொண்டிருந்த சிறிலங்கா விமானப்படையினரை வழிமடக்கி விடுதலைப் புலிகள் திடீர்த்தாக்குதல் நடத்தினர். இதில் விமானப்படையினர் இருபத்து மூன்று பேர் கொல்லப்பட்டனர். மேலும் பலர் படுகாயமடைந்தனர். நவீன ஆயுதங்கள் பலவும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

நேற்றுக் காலை எட்டு முப்பது மணியளவில் நடைபெற்ற இத் தாக்குதலின் போது லெப். விக்னேஸ் இரண்டாம் லெப்டினன்ட் கருணன் ஆகியோர் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.

இம் மோதல்கள் பற்றி மேலும் தெரியவருவதாவது: நேற்றுக் காலையில் வேப்பங்குளம் முகாமிலிருந்து சுமார் முப்பது பேரைக் கொண்ட விமானப்படை அணியொன்று பத்தாம் கட்டை விமானப் படை முகாம் நோக்கிச் சென்றுகொண்டிருந்தது அவர்களைத் திடீரென வழிமறித்த விடுதலைப் புலிகள் கடுமையான தாக்குதல்களை மேற்கொண்டனர்.

சில நிமிடங்கள் மட்டுமே நீடித்த இம் மோதலில் விமானப்படையினர் இருபத்து மூன்றுபேர் கொல்லப்பட்டதுடன் ஏனையோர் காயங்களுடன் தப்பியோடினர்.

இதேவேளை வேப்பங்குளம் முகாமிலிருந்தும் பத்தாம் கட்ட முகாமிலிருந்தும் சம்பவம் நடைபெற்ற இடத்தை நோக்கிச் சென்ற படையினர் மீதும் விடுதலைப் புலிகள் கடும் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

இம் மோதல்களையடுத்து அப் பகுதிக்கு விரைந்த இரண்டு உலங்குவானூர்திகளும், இரண்டு குண்டு வீச்சு விமானங்களும், இரண்டு அவ்ரோ விமானங்களும் கடும் தாக்குதல்களில் ஈடுபட்டன. பிற்பகல் இரண்டு முப்பது மணி வரை இந்த விமானத் தாக்குதல்கள் நீடித்தன.

---

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
கிளிநொச்சிக் கிளை

## நிர்வாக அலுவலர்

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் ஆங்கிலத்திலும் தமிழிலும் ஆளுமை இருப்பதோடு நிர்வாகத் துறையிலும், கணக்கியலிலும், அனுபவமும், தேர்ச்சியும், ஆற்றலும் உள்ளவர்களிடமிருந்து 29-02-92 ற்கு முன்பதாகக் கோரப்படுகின்றன;

இப்பணிமனையில் 10-03-92 முற்பகல் 10·00 மணிக்கு நடைபெறவுள்ள நேர்முகப் பரீட்சைக்கு சமுகம் தரவும்.

வேதனம் : கலந்தாலோசித்து தீர்மானிக்கப்படும்.

கௌரவ செயலாளர்

கிளிநொச்சி,
19-02-1992. (2229)

---

## கெற்பலிகுடியேற்றத்திட்டம் புதிய வசதிகளுக்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

இராணுவநடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்த மக்களுக்கென கெற்பலியில் அமைக்கப்பட்ட குடியிருப்பில் இதுவரை 541 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டிருக்கின்றன.

இங்கு உள்ள மாணவர் வசதிக்காக புதிதாக பாடசாலை ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கக்கிளையும் திறக்கப்பட்டிருக்கிறதுடன் நடமாடும் மருத்துவ சேவைப் பிரிவு ஒன்றும் ஆரம்பிக்கப் பட்டிருக்கிறது.

இங்குவாழும் மக்களின் தொழில்வாய்ப்புக்காக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினூடாக மக்கள் வங்கி கடன் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. (க)

### சிறிலங்கா அரசை கண்டித்து

## மாபெரும் ஆர்ப்பாட்டம் கிளிநொச்சியில் நடந்தது

(கிளிநொச்சி)

சிறிலங்கா அரசு மாணவர்கள் மீது காட்டும் அநீதிகளை எதிர்த்து மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நேற்று கிளிநொச்சியில் நடைபெற்றது. பெருந்திரளான மாணவர்களும், ஆசிரியர்களும், பெற்றோர்களும் இந்த ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

இரணைமடுச் சந்தியில் ஆரம்பமான இந்த ஊர்வலம் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நிறைவு பெற்றது.

### சிறிலங்கா ஜனாதிபதி தேர்தலில்

## பிரேமாவுடன் போட்டியிட பொதுவேட்பாளர் வேண்டும்

### லலித்அத்துலத்முதலி

(கொழும்பு)

ஜனாதிபதிக்கான தேர்தலில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைக்கு எதிரான அனைத்துக் கட்சிகளினதும் ஆதரவைப் பெறக் கூடிய ஒரு வேட்பாளரை ஆதரிக்க ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி தயாராகவுள்ளது. வரும் ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி பிரேமதாசாவை வெற்றிகொண்டு மீளவும் பாராளுமன்றத்தின் அதிகாரத்தை நிலைநாட்டவுள்ளோன் என்று மேற்படி முன்னணியின் தலைவர்களில் ஒருவரான லலித் அத்துலத் முதலி மொறட்டுவையில் கேள்வி - பதில் முறையில் அமைந்த கூட்டமொன்றில் தெரிவித்தார்.

நாட்டில் பாரிய அரசியல் நெருக்கடி ஒன்று ஏற்பட்டு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறை, ஒரு சர்வாதிகார ஆட்சியாக மாறிக் கொண்டிருக்கிறது என்று அவர் தெரிவித்தார்.

மனித உரிமைகள் மீறல், மாணவர்களும் சாதாரண மக்களும் மர்மமான முறையில் காணாமல் போதல் நாட்டில் நிலவும் பயங்கர சூழ்நிலை எல்லாம் இந்த ஆட்சி அமைப்பின் விளைவுகளாகும் என்றும்,

ஜனநாயகத்தை மீளவும் நிலைநாட்டி, பொருளாதாரத்தை ஒழுங்கமைக்க மக்கள் விரும்புகிறார்கள் என்றும் கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த லலித் அத்துலத் முதலி தெரிவித்தார்.

நாடு சுதந்திரமடைந்த பிறகு ஏற்பட்ட பாரிய நெருக்கடியான காலகட்டத்தில் எமது கட்சி உருவாகியுள்ளது. ஜனாதிபதிக்கு எதிரான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த குற்றச்சாட்டு மனுவின் விளைவு தான் எமது கட்சி குற்றச்சாட்டு மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்த குற்றங்களையும், லஞ்சம், ஊழல், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறை ஆகியவற்றையும்மக்கள் உணர்ந்துள்ளார்கள்.

எனவே எதிர்க்கத்தயாராக உள்ளனர் என்கிறார் காமினி திஸநாயக்கா

---

## மரண அறிவித்தல்

### திருமதி கதிர்காமு லீலாவதி

புலோலியைப் பிறப்பிடமாகக்கொண்ட திருமதி கதிர்காமு லீலாவதி 20-2-1992-இல்சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலம்சென்ற வேலுப்பிள்ளை கதிர்காமு [ஓய்வுபெற்ற கிளாக்கர்] அவர்களின் அன்பு மனைவியும், வரதராஜா [கடல் கடந்த தொலைபேசி திணைக்களம், கொழும்பு], திருமதி மங்களேஸ்வரி(டென்மார்க்), கனகராஜா [கிராமசேவையாளர், குமரபுரம்]. திருமதி புவனேஸ்வரி [கனடா], திருமதி மகேஸ்வரி [கனடா], செல்வன் சிறிஸ்கந்தராஜா[கனடா],செல்வன் வைகுந்தராஜா [டென்மார்க்], செல்வன் பேரின்பராஜா [டென்மார்க்], செல்வி மனோரஞ்சிதம், செல்வி மங்கையற்கரசி ஆகியோரின் அன்புத்தாயாரும், திரு. சிவக்கொழுந்து [டென்மார்க்], திரு திருநாதன் [கனடா], திரு. ரவீந்திரன் [கனடா], திருமதி மகேந்திரகுமாரி [கொழும்பு], திருமதி தமிழ்மலர் [ஆசிரியை, தர்மபுரம் ம. வி ] ஆகியோரின் அன்பு மாமியாரும், உமைதர்ஷன், கதிர்நேசன் [டென்மார்க்], சர்மிளா [கனடா] ஆகியோரின் அன்புப் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 22-2-92 (இன்று) சனிக்கிழமை காலை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காகப் புலோலி[சுப்பர்மடம்] மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகன்
(வரதராஜா கனகராஜா)

''சுப்பிரமணிய வாசம்'',
புலோலி மேற்கு,
புலோலி. (2232)

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 2992 ஆம் ஆண்டு பெப்பரவரி மாதம் 22ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது